**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 12** **நாள்: 07.01.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலத்தில் (மண்டலம் 6ல்) தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் சுய உதவிக் குழுக்கள் வாயிலாக தற்காலிகமாகப் பணியாற்றி வந்த தூய்மைப் பணியாளர்கள் 29 பேர், தற்போது, திரு.வி.க.நகர் மண்டலத்தில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொண்டு வரும் தனியார் நிறுவனமான ராம்கி நிறுவனத்தில் தூய்மைப் பணியாளர்களாக இணைந்து அவர்களுக்கான பணி ஆணை இந்நிறுவனத்தின் சார்பில் இன்று (07.01.2026) வழங்கப்பட்டது.**

பெருநகர சென்னை மாநகராட்சியில், இராயபுரம் மண்டலம் மற்றும் திரு.வி.க. நகர் மண்டலம் (மண்டலம் 5 & 6) ஆகிய இரண்டு மண்டலங்களில் பெருநகர சென்னை மாநகராட்சியினுடைய திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்வதற்கான ராம்கி நிறுவனத்தின் சார்பில், இந்த இரண்டு மண்டலங்களில் ஏற்கனவே தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் (NULM) சுய உதவிக் குழுக்கள் வாயிலாக தற்காலிகமாகப் பணியாற்றி வந்த தூய்மைப் பணியாளர்கள் இதுவரை 448 பேர் சேர்ந்துள்ள நிலையில், இன்று (07.01.2026) மேலும் 29 பேர் இந்நிறுவனத்தில் தூய்மைப் பணியாளர்களாக சேர்ந்து இதற்கான பணி ஆணைகள் ராம்கி நிறுவனத்தின் சார்பில் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் திரு.வி.க.நகர் மண்டல அலுவலர் திரு. சொக்கலிங்கம், செயற்பொறியாளர்கள் திரு. சதீஷ், திரு. பழனி , பெருநகர சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள் நல பல்வேறு சங்கங்களின் பிரதிநிதிகள், ராம்கி நிறுவனத்தின் அலுவலர்கள் பங்கேற்றனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**